# ஷாகா - கட், கண வியவஸ்தா

## (ஷாகா நிர்வாகம்)

### மென் திறன் (Soft skills)

அமெரிக்காவில் பிரபலமான Stanford Universityயின் முன்னாள் மாணவர்களில், உச்சத்தைத் தொட்டவர்கள் மத்தியில் ஒரு சர்வே எடுக்கப்பட்டது. அவர்களுடைய வெற்றிக்கு அவர்களுடைய துறைசார்ந்த அறிவு (Domain expertise) எந்த அளவு பயன்பட்டது, மென் திறன் (Soft skill) எந்த அளவு பயன்பட்டது என்பதே அந்த சர்வேயின் நோக்கம். இறுதியில் கிடைத்த முடிவு என்னவென்றால், அவர்களின் வெற்றிக்கு 87.5% மென் திறனும், வெறும் 12.5% மட்டுமே துறை சார்ந்த அறிவும் பயன்பட்டது என்பதே.

மென் திறன் என்பது நிர்வாகத் திறன். அதில் நேர மேலாண்மை, மனித நிர்வாகம், உரையாடல் திறன், நட்புக் கொள்ளும் திறன், திட்டமிடல் அனைத்தும் அடங்கும். நல்ல ஷாகா நடத்துவதற்கும் இது பொருந்தும். ஒரு ஷாகாவை திட்டமிட்டு நன்கு நடத்தினால் முக்கிய சிக்ஷக்கின் மென் திறனும் அதாவது நிர்வாகத் திறனும் வளரும். அது வாழ்வின் அனைத்து துறைகளிலும் பிரதிபலிக்கும்.

### ஷாகா நோட்டு / டைரி

ஷாகாவிற்குத் தனியாக ஒரு நோட்டு அல்லது டைரி முக்ய சிக்ஷக்கிடம் இருக்க வேண்டும்

### படபத்திரம்

கல்வி நிறுவனத்தில் மாணவர்கள், தொழில் நிறுவனத்தில் தொழிலாளர்கள் - பட்டியல் - அதுபோல் ஷாகா டைரியில் அனைத்து ஸ்வயம்சேவகர்கள் பட்டியல் அதாவது படபத்திரம் இருக்க வேண்டும்.

பட பத்திரத்தில் தினசரி ஷாகாவிற்கு வரக்கூடியவர்கள், வாரம் ஒரு முறை சாங்கிக் வர்ககூடியவர்கள், விழாக்கள் மற்றும் நிகழ்ச்சிகளுக்கு வரக்கூடியர்கள், தொடர்பில் மட்டும் உள்ளவர்கள் என வகைப் படுத்திக் கொள்ளலாம்.

அத்துடன் ஸ்வயம்சேவகர்களின் கணவேஷ் விபரங்கள், முகாம் முடித்த விபரங்கள், பிறந்த தேதி போன்ற விபரங்களும் சேகரித்து வைக்க வேண்டும்.

### கட் ஏற்பாடு

இது சங்கஸ்தானத்திற்கு வெளியில் உள்ள ஏற்பாடு. தெரு அல்லது பகுதிவாரியாக ஸ்வயம்சேவகர்களின் கட் பிரிக்க வேண்டும். 5 முதல் 7 பேர் ஒவ்வொரு கட்டிலும் இருக்கலாம். ஒவ்வொரு கட்-டுக்கும் ஒரு கட்நாயக் இருக்க வேண்டும்.

ஷாகாவிற்கு முன், பின் சம்பர்க கட் வாரி நடைபெற வேண்டும்.

கட் வாரியாக பல்வேறு நிகழ்ச்சிகள், சேர்ந்து சாப்பிடுதல், நிலவொளி நிகழ்ச்சி, வன சஞ்சார் என யோசிக்கலாம்.

கட் வாரியாக பைட்டக் மாதம் ஒரு முறை நடத்த வேண்டும்.

கட்-களுக்கிடையே ஆரோக்கியமான போட்டி நிலவும் வகையில் ஷாகா நிகழ்ச்சிகள் நடத்த வேண்டும். உ-ம் வினாடிவினா, விளையாட்டு போட்டிகள், உபஸ்திதி தினம்…

### கண ஏற்பாடு

இது சங்கஸ்தானத்திற்கு உள்ளே உள்ள ஏற்பாடு.

ஒரு கணவில் அதிகபட்சம் 22 பேர் வரை இருக்கலாம்.

வயது, உடல் திறன், பாடங்கள் செய்யும் திறன் போன்ற அடிப்படையில் கண பிரிக்கலாம்.

கண சிக்ஷக் ஏற்பாடு இருக்க வேண்டும்.

கணவாரியாக நிகழ்ச்சி திட்டம் இருக்க வேண்டும்.

### ஷாகா குழு (ஷாகா டோலி)

முக்ய சிக்ஷக், ஷாகா கார்யவாஹ், கட்நாயக், கண சிக்ஷக் மற்றும் ஷாகா பாலக் சேர்ந்த குழு. குழு அன்னியோன்யமான ஆரோக்கியமான குழுவாக இருக்க வேண்டும்.

### ஷாகா பைட்டக்

வாரம் ஒரு முறை நடத்த வேண்டும்

அரை மணியிலிருந்து ஒரு மணி நேரம் வரை நடத்தலாம்.

முக்ய சிக்ஷக் அல்லது ஷாகா கார்யவாஹ் பைட்டக்கை நடத்த வேண்டும்.

பைட்டக்கில் சென்ற வாரம் ஷாகா நேரத்தில் மற்றும் சம்பர்க சமயத்தில் கிடைத்த அனுபங்கள், ஸ்வயம்சேவகர் வருகை பற்றிய செய்திகள் ஆரம்பத்தில் பேச வேண்டும். அதன் பின்னர் அடுத்த வாரத்திற்கான ஷாகா நிகழ்ச்சிகள் பற்றி திட்டமிட வேண்டும்.

ஒவ்வொரு வாரமும் பைட்டக்கில் முடிவு செய்யும் விஷயங்களை ஷாகா நோட்/டைரியில் எழுதி வைக்க வேண்டும் - வருடத்தின் 52 வாரம் நடந்த பைட்டக்கின் ‘நடவடிக்கை குறிப்புகள்’ (minutes of the meeting) டைரியில் இருந்தால் நலம்.

**சராசரி சங்க்யா**

நாள் தவறாமல் தினசரி ஷாகா சங்க்யா டைரியில் குறித்து வைக்க வேண்டும். அந்த சங்க்யாவை இறங்கு வரிசையில் எழுதி 4-வது பெரிய சங்க்யாதான் வாராந்தர சராசரி சங்க்யா. 365 நாள் சங்க்யாவும் டைரியில் இருந்தால் நலம்.

**வயது வாரி ஷாகாக்கள் (ஆயு அனுஸார் ஷாகா)**

1.ஸம்யுக்த வித்யார்த்தி 2.தருண வித்யார்த்தி 3.தருண விவசாயி 4.ப்ரௌட